தாவர வளர்ச்சிப் பதார்த்தங்களின் இயல்புகள்



e තක්සලාව கல்விக்கூடம்™

The National e-learning Portal for The General Education

Start Your Learning Journey with e-thaksalawa

தாவர வளர்ச்சி பதார்த்தங்களின் இயல்புகள்

⇒ குறைந்த செறிவில் உற்பத்தி செய்யப்படும்

⇒ உற்பத்தி செய்த இடத்திலிருந்து பிறிதொரு பகுதிக்கு கொண்டுசெல்லப்படும்

⇒ தாவர வளர்ச்சியிலும் சீராக்கத்திலும் முக்கிய பங்கு பெறும்

தாவர வளர்ச்சி பதார்த்தங்களுக்கும் தாவர ஓமோன்களுக்கும் இடையில் வித்தியாசம் உள்ளது. தாவர ஓமோன்கள் மிகக்குறைந்த செறிவிலும் தொழிற்படக்கூடியவை எனவே தான் உயிரியலாளர்கள் ஓமோன் எனும் பதத்தைவிட தாவர வளர்ச்சிப் பதார்த்தங்கள் என்பது சிறப்பானது என குறிப்பிடுகின்றனர்

தாவர வளர்ச்சி பதார்த்தங்களாக கீழ்வருவன காணப்படுகின்றன

01. ஒக்சின்கள்
02. ஜிபரலின்கள்
03. சைற்றோகைனின்
04. அப்சிசிக்கமிலம்
05. எதிவீன்
06. யஸ்போனிக்கமிலம்



தொகுப்பு : திரு A. தயாபரன், உயிரியல் ஆசிரியர் (யா/யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி)
கணினி வடிவமைப்பு : திரு.ச.ராதாரவி த.தொ.தொ ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, மன்னார்.)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

01. ஒக்சின்கள்

தொழிற்பாடுகள்

⇒ குறைந்த செறிவுகளில் தண்டின் நீட்சியை தூண்டுதல்

⇒ இடம்மாறிப்பிறந்த வேர், பக்கவேர் ஆகியவற்றின் உருவாக்கத்தை தூண்டுதல்

⇒ பழ விருத்தியை ஒழுங்காக்கல்

⇒ உச்சியாட்சியை மேம்படுத்தல்

⇒ ஒளித்திருப்பத்தில் பங்கெடுத்தல்

⇒ புவித்திருப்பத்தில் பங்கெடுத்தல்

⇒ கலவியத்தத்தை மேம்படுத்தல்

02. ஜிபரலின்கள்

தொழிற்பாடுகள்

⇒ தண்டின் நீட்சியைத் தூண்டுதல்

⇒ மகரந்த விருத்தியை தூண்டுதல்

⇒ மகரந்தக்குழாயின் வளர்ச்சியை தூண்டுதல்

⇒ பழ வளர்ச்சியைத் தூண்டுதல்

⇒ வித்துக்களின் விருத்தியையும் முளைத்தலையும் தூண்டுதல்

⇒ இலிங்க நிர்ணயத்தையும் இளம்/குடம்பு நிலையிலிருந்து முழுவுடல் நிலைக்கான உருமாற்றத்தையும் ஒழுங்காக்கல்



தொகுப்பு : திரு A. தயாபரன், உயிரியல் ஆசிரியர் (யா/யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.ராதாரவி த.தொ.தொ ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, மன்னார்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

03. சைற்றோகைனின்

தொழிற்பாடுகள்

⇒ தண்டிலும், வேரிலும் கலப்பிரிவை ஒழுங்காக்கல்

⇒ உச்சியாட்சியை மாற்றியமைத்தல் மற்றும் கக்கவரும்பின் வளர்ச்சியை தூண்டுதல்

⇒ காழிற்குரிய இழையங்களிற்க்குள் போசனைப் பதார்த்தங்கள் கொண்டுசெல்லப்படுதலை ஊக்குவித்தல்

⇒ வித்து முளைத்தலைத் தூண்டுதல்

⇒ இலைகள் முதிர்தலைத் தாமதமாக்குதல்

04. அப்சிசிக்கமிலம்



தொழிற்பாடுகள்

⇒ வளர்ச்சியை நிரோதித்தல்

⇒ வரட்சிக்கான தகைப்பின் போது இலைவாய்கள் மூடிக்கொள்வதைத் தூண்டுதல்

⇒ முதிர்வுறா நிலையில் வித்துக்கள் முளைத்தலையும் வித்துக்களின் உறங்குநிலையையும் தூண்டுதல்

⇒ இலைகள் முதிர்வடைதலைத் தூண்டுதல்

⇒ உலர்த்துதலுக்கான சகிப்புத்தன்மையைத் தூண்டுதல்



தொகுப்பு : திரு A. தயாபரன், உயிரியல் ஆசிரியர் (யா/யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.ராதாரவி த.தொ.தொ ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, மன்னார்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

05. எதிவீன்

தொழிற்பாடுகள்

⇒ அநேக வகைப் பழங்களின் பழுத்தலைத் தூண்டுதல்

⇒ இலைகளின் வெட்டும்படை உருவாதலைத் தூண்டுதல்

⇒ வித்து முளைத்தலில் மூன்றுவிதமான துலங்களை ஏற்படுத்தல் (தண்டின் நீட்சி நிரோதித்தல், கிடையான வளர்ச்சி தூண்டப்படுதல்,பக்க விரிவு தூண்டப்படுதல்

⇒ மூப்படையும் வீதத்தை மேம்படுத்தல்

⇒ வேர் மற்றும், வேர்மயிர் உருவாதலைத் தூண்டுதல்

⇒ அனோனேசிக் குடும்பத்தில் பூக்கள் உருவாதலைத் தூண்டுதல்

06. யமோனிக்கமிலம்

தொழிற்பாடுகள்

⇒ வளர்ச்சியை நிரோதித்தல், வெட்டும்படை உருவாக்குதல், பூக்களை உருவாக்குதல் போன்ற செயற்பாட்டிற்கு உதவும்.



தொகுப்பு : திரு A. தயாபரன், உயிரியல் ஆசிரியர் (யா/யாழ் வயாவிளான் மத்திய கல்லூரி)

கணினி வடிவமைப்பு : திரு.ச.ராதாரவி த.தொ.தொ ஆசிரியர் (மன்/தலைமன்னார் பியர் அ.த.க. பாடசாலை, மன்னார்.)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk